## தமிழ்நாடு பாடநூல் கழகத்தில்

# பன்னாட்டு மொழி பெயர்ப்பு நாள் கொண்டாட்டம்!

## பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமை!

## மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் வரவேற்புரை!

சென்னை, அக். 1 -

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பல்வேறு மொழிபெயர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது கடந்த 3 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் இதுவரை 300க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

திசைதோறும் திராவிடம் (தமிழ் இலக்கிய மற்றும் தமிழக வரலாற்று நூல்கள் மொழிபெயர்ப்பு), முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் (மருத்துவ மற்றும் தொழில்நுட்ப நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு), இளந்தளிர் இலக்கியத் திட்டம் (குழந்தைகளுக்கான இலக்கியங்களை தமிழ் எழுத்தாளர்களைக் கொண்டு எழுதி வெளியிடுதல் மற்றும் அந்நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்), தமிழில் குழந்தைகளுக்கான உலக இலக்கியங்கள் ஆகிய திட்டங்கள் தற்போது பாடநூல் கழகத்தால் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 30ஆம் நாள் பன்னாட்டு மொழிபெயர்ப்புத் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 30.09.2024 அன்று தமிழ்நாடு பாடநூல் கழகத்தில் நடைபெற்ற மொழிபெயர்ப்புத் தின விழாவில் பல்வேறு மொழி பெயர்ப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

விழாவிற்கு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். மேலாண்மை இயக்குநர் முனைவர். பொ.சங்கர், வரவேற்புரை ஆற்றினார். பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய 'மாபெரும் தமிழ்க் கனவு' நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மூத்த பத்திரிக்கையாளரும், மொழிபெயர்ப் பாளருமான விஜயசங்கர், சிறுகதை மொழிபெயர்ப்பாளர் இராமகிருஷ்ணன், கைட்டன் மற்றும் ஹால் எழுதிய 'மருத்துவ உடற்செயலியல்' நூலை மொழிபெயர்த்த மருத்துவர்கள் பாலசுப்பிரமணியன், திருமதி. ரூபஸ்ரீ மற்றும் செந்தில்குமார் ஆகியோர் பாராட்டப்பெற்றனர்.

மகப்பேறு மருத்துவர் டாக்டர் ஜெயஸ்ரீ தனது மொழிபெயர்ப்பு அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

'மேம்பட்ட இயல்பு வேதியியல்' எனும் நூலை உருவாக்கிய பேரா. ஃபீரிடா ஞானராணி, புள்ளியியல் நூலை மொழிபெயர்த்த முனைவர் தீபப்பிரியா ஆகியோருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. குழந்தை இலக்கியங்களை மொழிபெயர்க்கும் கல்லூரி மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதோடு பாராட்டு சான்றிதழும் பெற்றனர். மூத்த பத்திரிக்கையாளரும், ஒருங்கிணைப்பாளருமான பீர் முகமது அஸிஸ் மாணவ மொழிபெயர்ப்பாளர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர் சங்கர சரவணன் விழாவினை ஒருங்கிணைக்க, உறுப்பினர் செயலர் முனைவர் பெ. குப்புசாமி நன்றி கூறினார்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற (03.10.2024 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.வி.கோகுலக் கண்ணன், க.செல்வம் எம்.பி. கு.மலர்விழி மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் - சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**க. சுந்தர்**, எம்.எல்.ஏ.
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு துணை முதலமைச்சராக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்பதை முன்னிட்டு செம்பாக்கம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் காமராஜபுரம் பஸ் நிலையம் அருகில் செம்பாக்கம் தெற்கு பகுதி கழக சார்பில் பகுதி கழக செயலாளர் இரா சுரேஷ் தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழகசெயலாளர்கள்,மாவட்டமாநகரபகுதி அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்,வட்ட கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள்,பொதுமக்கள் உடனிருந்தனர்.

## உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வரானார்!

# எழும்பூர் தொகுதியில் கேக் - இனிப்பு - அறுசுவை உணவு!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, அக்.1–

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சரானதைக் கொண்டாடும் விதமாக, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கர் நானா ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியத்தோப்பு, சிவ ராவ் சாலையில் நடந்த நிகழ்வில், தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் கேக் வெட்டி, 300 பேருக்கு இனிப்புகளோடு அறுசுவை அசைவ உணவு விருந்தளித்து, 25 கிரிக்கெட் மற்றும் 25 கால்பந்தாட்ட அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்கு பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன், அவைத் தலைவர் விசுவநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், புஷ்பராஜ், கோமகன், தன பிரபாகர், பாக முகவர் கவிதா மற்றும் இளைஞரணியைச் சேர்ந்த ஜே.எஸ்.பி.சீனிவாசன், கலை, எம்.விக்கி, சந்தோஷ், பி. வினோத், டி.விக்கி, பி.பாபு, இ.அருண், பார்த்திபன், ஜி.மணி, சதீஷ், கிரண், சந்துரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குரிசில் உதயா வாழ்க! வெல்க!



சங்கம்எங் கும்முழங் கிற்று
சாதனைகள் செய்வ தற்காய்
எங்கெங்கும் மக்கள் வாழ்த்து!
மன்பதை தொண்டு செய்வாய்!
திங்கள்போல் ஒளிமண் வீசித்
திசைகள் எங்கும் வாழ்க!
சிங்கம்போல் முழங்கும் ஆட்சி
துணைமுதல் வரானாய் வாழ்க!

இளைஞர்தம் ஊட்டச் சத்தே!
இயக்கத்தின் கையி ருப்பே!
களைப்புறாத் தேனீ சுற்றும்
கழகத்தின் சுறுசு றுப்பே!
தளையறு காளை யன்ன
தலைமுறை காக்கும் போத்தே!
விளைகதிர் அழகே! வீர
வரலாறு படைக்கின் றோனே!

வித்தைகள் பலவும் நாட்டும்
விஞ்ஞானப் படைப்பே! மங்காச்
சித்திரப் பொலிவே! சீர்கொள்
சிங்கார விளக்கே! சங்கே!
முத்திரை பதிக்கும் வானில்
முகிழ்த்தெழு கதிரே! ஓங்குக்
குத்துவாள் கூர்மை வெற்றி
கற்றிடத் தந்தோன் வாழி!

கலைஞரின் குலத்தே தோன்றல்
கழகச்சீர்ச் சிப்பாய்! ஞானக்
கலைபல கற்கும் வல்லோன்!
கவினுறு காட்சி தோய்ந்த
குலைகனி குலுங்கும் மாண்பே!
குற்றால அருவி போல்வாய்!
விலையேதும் கேளாத் தொண்டின்
விந்தையே வாழ்க நீடு!

படைநிமிர் அணிவ குப்பே!
புறப்பாட்டே! இளைஞர்க் கூட்டம்
நெடுந்தூக்கம் கெடுக்க வந்த
நீலவான் நிலவே! வல்லத்
தடைபல தகர்க்கும் சிங்கத்
தனிநடை ஏறே! கன்றே!
முடைநாற்றம் ஏற்காப் பாங்கின்
மகத்துவக் குரிசில் வாழ்க!

தளபதி படையில் நீஓர்
தனிப்பெரும் போர்வாள்! கூர்வேல்!
களத்திலோ அஞ்சாச் சிங்கம்!
கடமைகொள் முழவம்! என்றும்
உளத்திடைத் தைத்த கொள்கை
உணர்வினைப் போற்றும் தங்கம்!
வளமிகு பழமை! ஆழி
வாஞ்சைகொள் பவளம்! வாழ்க!

உகுத்திடு குப்பைக் கூளம்
உறுபிணி நீங்க நின்றே!
தொகுதியைச் சுற்றிச் சுற்றித்
தொண்டினில் வெல்வாய்! நீண்டப்
பகுதியை வட்டந் தன்னைப்
பணிசெயும் சிறந்த பாங்கில்
வகுப்பெடுப் பாய்நீ! மக்கள்
முகத்திடை முறுவல் காண்பாய்!

தேய்ந்திடாக் கழகத் திற்கே
தேர்தலில் வெற்றி காண
ஓய்ந்திடாத் தொண்டில் நின்றே
உன்னத சரிதம் செய்வாய்!
பாய்ந்திடும் புலிபோல் வீறு
பணிபல தொடக்கங் காண்பாய்!
சாய்ந்திடா இயக்கந் தாங்கத்
தக்கதோர் தூணும் ஆவாய்!

படத்தினில் நடித்த துண்டு!
பணியிலோ நடித்தா யில்லை!
குடத்திடை மழைபெய் நீராய்க்
குடற்பசித் தாகம் தீர்ப்போன்!
திடமிகு ஊக்க நெஞ்சால்
தனித்திறம் உதயா பெற்றான்!
படைத்திடு வெற்றி எங்கும்
புவனமே வாழ்த்த வாழ்க!

பிறப்பிலோர் கலைஞர் போத்தே!
பரிதியின் பிஞ்சே! வீரச்
சிறப்புறு இளைஞ! திங்கள்
சிந்தொளி மேனி கொண்ட
மறப்படை மறவ! அன்பு
மேவு மணிப்பூண் மார்ப!
திறம்பல ஏற்ற நம்மின்
தளபதி தோன்றல் வாழ்க!

திராவிட மாட லாட்சி!
திரும்பிய திசைகள் எங்கும்
பரவிடக் கருத்த ரங்கம்
பலமுனை பயில ரங்கம்!
விரவிடப் பாங்கு செய்தாய்!
வியப்பும்நீ! விந்தை நீயோ
முரசொலி! முழக்கம் ஓங்க
முன்னேற்றக் கழகம் வாழ்க!




**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக் குழுத் தலைவர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.என். சுப்பிரமணியன்

**அக்டோபர் 1 (2015)**



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சமத்துவ சமூக நீதியை கருவறையில் நிலைநாட்டுவோம்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பணி சிறக்க மனதார வாழ்த்துகள்!

## அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் – தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர் சங்கத் தலைவர் வா.ரங்கநாதன் அறிக்கை!

திருவண்ணாமலை, அக்.1

கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராகப் பதவியேற்றதற்கு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் - தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் சார்பாக வாழ்த்துகள் கூறி அதன் தலைவர் வா.ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் கொள்கை வழிவந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக நியமனம் செய்திருப்பது தமிழ்நாட்டு அரசியலில் இளைஞர்களின் அத்தியாயம் தொடங்கியதைக் குறிக்கிறது.

இன்று துணை முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இறைவன் விரும்பியபடி கோவிலில் சமத்துவத்தை நிலைநாட்ட அனைத்து சாதி இந்துக்களையும் அர்ச்சகராக்க முயற்சி எடுக்க வேண்டும் என்றும், அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் பெரிய கோவில்களில் நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம்.

அவரின் பணி சிறக்க மனதார வாழ்த்துகிறோம்.

இவ்வாறு வா.ரங்கநாதன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தகவல்-தொழில்நுட்ப அணிப் பொறுப்பிற்கு நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தகவல் தொழில்நுட்ப அணிக்கான மாவட்ட துணை அமைப்பாளர்கள்/தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்/பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்/வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கான நேர்காணல் நடைபெற உள்ளது. இதில் ஆண், பெண் என இருபாலரும் கலந்து கொள்ளலாம். தங்களது சுயவிவரங்களை (RESUME) புகைப்படத்துடன்

chennaiwestdmkitwing@gmail.com (or)
Whatsapp No.: 9884299170

என்ற மின்னஞ்சலுக்கு செப்டம்பர் 30ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**நேர்காணல் விவரங்கள்**

நாள் : அக்டோபர் 2, 2024 - புதன் கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : சென்னை மேற்கு மாவட்ட அலுவலகம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

குறிப்பு:
1) கல்வித்தகுதி : Degree / Diploma
2) Facebook/Twitter/Whatsapp/Instagram ஆகிய கணக்குகளை பயன்படுத்துபவராக இருக்க வேண்டும்.
3) கல்வித்தகுதிக்கான சான்றிதழ்களை நேர்காணலுக்கு கொண்டு வர வேண்டும்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.